# செந்தமிழ்

தொகுதி : 96 திருவள்ளுவர் ஆண்டு 2033 சூன் 2002 பகுதி : 6

திங்கள் இதழ்

ஆசிரியர் **இரா. அழகுமலை** எம்.ஏ.,எம்.ஃபில்.,

பொறுப்பாசிரியர் **இரா. சதாசிவம்** எம்.ஏ.,எம்.ஃபில்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1.

## தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு

| | |
|---|---|
| முகவை மன்னர் திரு.நா. குமரன் சேதுபதி | தலைவர் |
| திரு. எம்.பி.ஆர். மலையாண்டி என்ற அசோக் | துணைத்தலைவர் |
| திரு. இரா. அழகுமலை | செயலாளர் |
| திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார் | உறுப்பினர் |
| திரு. மா. சங்கர பாண்டியன் | உறுப்பினர் |
| திரு. டாக்டர். ந. சேதுராமன் | உறுப்பினர் |
| திரு. கே. கந்தசாமி | உறுப்பினர் |
| திரு. வெ. பழனிச்சாமித்தேவர் | உறுப்பினர் |
| திரு. வே. திருவரங்கராசன் | உறுப்பினர் |
| திரு. க.சி. அகமுடைநம்பி | உறுப்பினர் |
| திரு. ச. பரங்குன்றம் | உறுப்பினர் |
| திரு. இரா. குருசாமி | உறுப்பினர் |

## செந்தமிழ் ஆசிரியர் குழு

பேராசிரியர். இரா. சதாசிவம்
பேரறிஞர். நா. பாலுசாமி
பேரறிஞர். தமிழண்ணல்
பேரறிஞர். செ. கந்தசாமி
டாக்டர். ந. சேதுராமன்
பேரறிஞர். ம.ரா.போ. குருசாமி
பேரறிஞர். கதிர். மகாதேவன்
பேரறிஞர். அ.அ. மணவாளன்
பெரும் புலவர். இரா. இளங்குமரன்
பேரறிஞர். அ. தட்சிணாமூர்த்தி
பேரறிஞர். ந. வாசுகிராஜா
பேரறிஞர். ஈ.கி. இராமசாமி
பேரறிஞர். சே. அரிராமநாதன்
திரு. வே. திருவரங்கராசன்

# செந்தமிழ்

தொகுதி : 96 திருவள்ளுவர் ஆண்டு 2033 சூன் 2002 பகுதி : 6

திங்கள் இதழ்

ஆசிரியர் இரா. அழகுமலை எம்.ஏ.,எம்.ஃபில்.,

பொறுப்பாசிரியர் இரா. சதாசிவம் எம்.ஏ.,எம்.ஃபில்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1.

# பொருளடக்கம்


இந்தியா செயல்படுத்துமா? 191

மகாவித்துவான்ச. தண்டபாணி தேசிகர் உரைத்திறன் 192
இரா. சதாசிவம்

மயிலைநாதரின் எழுத்திலக்கணம் 199
பேரறிஞர் பெ. சுயம்பு

திருவெம்பாவையில் அகப்பொருள் 206
பேரறிஞர் சுப. அண்ணாமலை

திருவள்ளுவரைத் தெரிந்து கொள்ளுங்கள் 209
பேரறிஞர். நாபா

இலக்கியப்புதையல் 219
பேரறிஞர் செ.கந்தசாமி

தமிழ்மொழி கற்பித்தலில் எழுத்துத்திறன் 225
பேரறிஞர் இரா. வேல்முருகன்

# இந்தியா செயல்படுத்துமா?

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தியாவின் தென்கிழக்கே தமிழரசு நடத்துகின்றார் மன்னர் பாற்கர சேதுபதி மகாராசா. இந்தியாவின் வடமேற்கே அருள் அரசுநடத்தும் சுவாமி விவேகானந்தர் தென்திசை நோக்கி வந்தார். இருவரும் சந்திக்கின்றனர்; இச் சந்திப்பு இந்திய வரலாற்றின் திருப்புமுனையாக அமைந்தது.

மன்னர் மாமுனிவரின் அருட்திறத்தை உணர்ந்தார்; உலகநாடுகளின் அரங்கத்தில் விவேகானந்தர் இந்தியாவின் பங்களிப்பை எடுத்துரைக்க வேண்டும் என வற்புறுத்தி பெரும் பொருட் செலவில் அவரை அனுப்பிவைத்தார்.

முனிவரை விழித்தெழச் செய்தார்மன்னர்
அவரோ நாட்டை விழித்தெழச் செய்தார்
'எழுமின் விழிமின் என்னும் முழக்கம்
எங்கும் பரவியது. முழக்கத்தின் மூலவித்து
மன்னர் பாற்கர சேதுபதி என்பதை
மாமுனிவர் விவேகானந்தர் தம் அன்பான
வாசகங்களால் உறுதி செய்கின்றார்.

"என்னாலும் என்மூலமாகவும் ஏதாகிலும் நற்காரியம் செய்யப்பட்டிருக்குமேயானால் அது இந்த மாமனிதர் பாற்கர சேதுபதியால்தான். இந்தியா இந்த நல்ல மனிதருக்கு கடமைப்பட்டிருக்கிறது. நான் அமெரிக்காவில் நடக்கும் சர்வமத மகாசபைக்குப் போக வேண்டுமென்று நினைத்தவரே இவர்தாம். அந்த எண்ணத்தை என் மனத்தில் எழுப்பியவரும் நான் அங்கு நிச்சயமாகச் சென்றாக வேண்டுமென்று இடைவிடாது வற்புறுத்தியவரும் இவர்தாம். அன்பான நமது தாய் நாட்டின் உயர்விற்காக இவரைப்போல் இன்னும் ஐந்தாறு மன்னர்கள் இருக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன்."

- சுவாமி விவேகானந்தரின் இந்தவாசகங்கள் மன்னரின் தனித்தன்மையையும் விடுதலை உணர்வையும் பறைசாற்றுகின்றன. மன்னர்பாற்கரசேதுபதி மகாராசாவின் நூற்றாண்டு நினைவு நாள் 2003 நவம்பர் 27

இந்தியா அவருக்கு விழா எடுப்பதன் மூலம் புதிய தலைமுறைக்கு பழைய தலைமுறையின் வானளாவியபுகழினை உணர்த்த முடியும்.

**மன்னர் பாற்கர சேதுபதியின் நூற்றாண்டு நினைவு நாள் 2003 நவம்பர் 27.**

# மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகர் உரைத்திறன்

*இரா. சதாசிவம்*

மகாவித்துவான் அவர்கள் நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதித் தமிழ்த்தாய்க்கு அருந்தொண்டாற்றியவர். தேவாரம்முதல் திருமுறை, திருவாசகம், திருமந்திரம், திருக்குறள் போன்ற நூல்களுக்கு அவர்கள் எழுதிய உரை ஆழமும் பரப்பும் உறுதியும் தெளிவும் உடையதாக விளங்கும். நூல் தோன்றிய காலத்தின் பின்னணி, அதற்குமுன் பிறந்த வரலாற்றுப்புலம், பிற்காலத்தில் அந்த நூலின் தாக்கம் தனக்கு முன் உரையாசிரியர்கள் தந்துள்ள அரிய விளக்கங்கள் ஆகிய பல்திறச் செய்திகளையும் தொகுத்து அளித்துக் கற்போர் உள்ளத்தில் கற்கும் ஆர்வத்தைக்கிளர்ந்து எழச்செய்யும் சிந்தனைவளம் அவருடைய உரைகளில் பரந்துகிடப்பதை ஊன்றிக்கற்போர் உணரலாம். அவருடைய உரை வாகனம் கற்போர்க்கு ஓர் இன்பச் செலவாக அமைகிறது.

ஈண்டு அவருடைய உரைகளுள் தேவாரம் முதல் பாடலுக்கு அவர்கள் எழுதிய உரைத்திறன் விளக்கப்படுகிறது.

திருஞான சம்பந்தர் சைவசமய குரவர்களுக்குள் முதலாவது வைத்து எண்ணப்படும் சிறப்புடையவர். திருஞான சம்பந்தருடைய பாடல்களில் காணப்படும் கருத்துவளம், சொல் அழகு, கற்பனை, ஓசைநயம், சிவஞானக்கனிவு கற்போருக்கு நவில்தோறும் இன்பம் பயக்கும் சிறப்புடையன. மகாவித்து வானுடைய தேவார உரை ஞானப்பேழையைத் திறக்கும் திறவுகோல் போல அமைந்து புதிய புதிய செய்திகளைத்தந்து அறிவுத்திறமும் அருள் நலமும் பெருகிக்கிடப்பதைக் காட்டும்.

பாட்டு :

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதி சூடிக்
காடுடைய சுடலைப்பொடி பூசி என் உள்ளம் கவர்கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாள் பணிந்து ஏத்த அருள் செய்த

பீடுடைய பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே.

"தோடு என்னும் அணியை அணிந்துள்ள, உமாதேவியை இடப்பாகம் உடைய சிவபெருமான் இடப வாகனத்தில் ஏறி, தூய வெண்மதியைச்சூடி திருவெண்ணீறு மேனியில் பொலிய என் உள்ளத்தைக் கவர்ந்தவன் அப்பெருமான், ஒரு காலத்தில் நான்முகனுடைய வழிபாட்டினை ஏற்று அருள் செய்தவன். அவனே எனக்குக் காட்சி தந்தருளியவன் அவன் இவனே அல்லவா!" என நிகழ்காலத்தில் ஒரு உரை வந்துள்ளது.

ஆனால் மகாவித்வானுடைய உரை விரிவும் விளக்கமும் நிறைந்திருப்பதை ஒவ்வொரு பாடலிலும் காணமுடிகிறது; திருஞானசம்பந்தர் சொல்லுக்குச்சொல் செய்திருக்கும் இலக்கிய வேலைப்பாடுகளையும் மெய்ப்பொருட் செய்திகளையும் உரையின்கண் விரித்துரைப்பதன்மூலம் இலக்கிய இன்பச்சுவையும் அருள் அனுபவத்தினைப்பும் கற்போர் உள்ளத்தில் ஊற்றெழச்செய்கிறார்; மேலும் மேலும் கற்கின்ற ஆர்வத்தைத் தூண்டுவதை உணரலாம்.

உரைக்குள் புகுவோம்

தோடுடைய செவியன்:

"தோடுடைய செவியன் எனப்பாடல் தொடங்கியதன் நுட்பத்தை முதற்கண் ஆய்வுக்கு எடுத்துக்கொள்கிறார். உலகுயிர்கள் துன்பம் நீங்கி இன்பம் அடைதலே பொருளாக, பாடல் பரமனார் திருச்செவியில் சென்று சேர, திருச்செவியை முதற்கண் சிறப்பித்தார், என்பார். இவ்வுண்மையை வலியுறுத்தச் சேக்கிழார் வாக்கினை நினைவு கூறுகின்றார்.

"பல்லுயிரும் களிகூரத் தம்பாடல் பரமர்பால்
செல்லுமுறை பெறுவதற்குத் திருச்செவியைச் சிறப்பித்து,"
என்ற சேக்கிழார் வாக்கால் தெரியலாம் என்பார்.

ஈண்டு திருஞான சம்பந்தருடைய அவதாரநோக்கம், உலகுயிர்கள் துன்பம் நீங்கி இன்பப்பேறு பெறுதலே பொருளாக விளங்கியது. அந்த நோக்கம் நிறைவுபெறவே அவர் ஊர்தோறும் சென்று மக்கள் உய்தி பெறத்திருப்பாடல்களைப் பாடினார். தாம்

பாடினால் மட்டும்போதாது, அச்செய்தி இறைவனுடைய இசைவு பெற்றாக வேண்டும். அவனுடைய திருச்செவிவழியாக திருஉள்ளத்திற்கு ஏற்புடையதாக வேண்டும். அவன் உள்ளம் மகிழ்ந்தால் உலகுயிர்கள் துன்பம் நீங்கி இன்பம் பெறும். உயிர்களின் சார்பாக இறைவனை நோக்கி முறையிடும் தேவாரம் முதலான திருமுறை நூல்களின் நோக்கம் நிறைவேற வேண்டுமானால் இறைவன் திருச்செவியேற்று அருளுதல் வேண்டும். அதனால் ஆசிரியர் செவியைப் போற்றிப் புகழ்கின்றார் என முதற்கண் விளக்குகிறார்.

தேவாரத்தின் வரலாற்றையும் அப்பாடல்கள் தோன்றிய சூழலையும் தெரிந்துகொண்டு படித்துப்பயன்பெற வேண்டும் என்னும் நோக்கத்தோடு ஆசிரியர் சேக்கிழார்தம் பெரிய புராணத்தில் தேவாரத்திருமுறைப் பாடல்கள் தோன்றிய சூழல், பாட்டின் உள்ளீடு, நோக்கம், அதன் சிறப்பு, நயம் ஆகியவற்றைத் தவறாது சுட்டிச்செல்வார். அந்த முறையில் தோடுடைய செவியன் என்ற தொடரை மேற்கோளுடன் விளக்கிய உரை ஆசிரியர், தோடுடைய செவி என்றதால் இடப்பாகத்துச் செவி என்பது குறிக்கப்பெறுகின்றது, கருணைக்கேற்றது தாய்தழீஇய இடப்பக்க மாதலின் அதனை முற்கூறினார் என்பார். இதற்கு மேலும் ஒரு நயம் தேர்ந்து உரைப்பார்.உரையாசிரியர்:

திருஞானசம்பந்தர் சோழவள நாட்டில் சீர்காழியில் கௌணியர் குடியில் தமிழ்மரபில் பிறந்து வேதம் பயின்று தமிழ் மறையாகிய தேவாரத்தை அளித்தவர். அவர்க்கு வடமொழியும் தென் தமிழும் வழி வழி அறிவு. அதனால் காயத்திரி மந்திரத்தின் முதல் எழுத்தாகிய 'த'கரத்தின் மீது பிரணவத்தின் முதலெழுத்தாகிய ஓகாரத்தைச் சேர்த்துத் "தோ" எனத் தொடங்கியிருப்பது அறிந்து இன்புறத்தக்கது எனமகாவித்துவான் விளக்குவது அவர்தம் வடமொழி தென் தமிழ்ப்புலமையும் மெய்ப்பொருட் செய்தியின் ஆழமும் பரப்பும் காட்டுவதாகும்.

**என் உள்ளம் கவர்கள்வன்:**

சைவ சமய குரவர் நால்வரும் நான்கு வகை

நெறியைப்பின்பற்றி இறையருள் இன்பம் பெற்றவர் எனச் சான்றோர் போற்றுவர். அவர்களுள் முதன்மையாக வைத்துப் போற்றப்படும் திருஞான சம்பந்தர் போற்றிய நெறி நால்வகை நெறிகளுள் சன்மார்க்க நெறி என உரை ஆசிரியர் அறிவுறுத்தும் திறம் கற்போர் அறிவுக்கு விருந்தாகும். தேவார உரையின் தொடக்கத்திலேயே திருஞான சம்பந்தர் நெறி இதுவெனச் சுட்டிச் சொல்வது கற்போர் மயக்கறுத்துத் தெளிவிப்பதாகும்.

"என் உள்ளம் கவர்கள்வன்" என்பது நாயகி நாயகன் பாவத்தில் ஞானசம்பந்தர் ஈடுபட்டுத் திளைத்தலைக்காட்டும். பதிப்பொருளுடன் இரண்டறக்கலந்த நிலையாகும். தமிழ்மரபில் அகத்துறைமரபாகும். மிகவுயர்ந்த அன்பு நிலையில் தலைவன் தலைவி வேற்றுமையின்றிக் கலந்த அன்பு நிலையை விளக்குவதாகும்.

திருஞான சம்பந்தர் ஞான மார்க்கத்தில் நின்று மெய்ப்பொருட் செய்திகளை விளக்கும் பெருமிதம் உடையவர்.

நெறிகளுள் உயர்ந்தது ஞான நெறி இதனை அப்பர்சுவாமிகள்

"ஞானத்தால் தொழுவர் சில ஞானிகள்
ஞானத்தால் தொழுவேன் உனை நானலேன்
ஞானத்தால் தொழுவார்கள் தொழக்கண்டு
ஞானத்தாய் உனை நானுந்தொழுவனே" என விளக்குவார்.

ஞான நெறியைப் பின்பற்றிய திருஞான சம்பந்தப் பிள்ளையார் தீவிரதர அன்பு கொண்டு சன்மார்க்க நெறியாகிய நாயக நாயகித்தன்மையில் எடுத்த எடுப்பிலேயே ஈடுபட்டு உமையொரு பாகனாக ஒரு பெண்ணோடு இருந்தபயில்வால் "என் உள்ளம் கவர்கள்வன்" என நயம்தோன்ற உரைக்கின்றார் என உரையாசிரியர் விளக்குவது சிந்தனையைத் தூண்டுவதாகும்.

நூல்முழுவதும் பயிலும் மாணவன் இத்தகைய செய்திகளை மனத்தில் பதியவைத்துக்கொண்டு பயின்றால் ஞானசம்பந்தர் நெறி இனிது புலனாகும். அவ்வகையில் உரையாசிரியர் சிறப்புற எடுத்து விளக்கும் உரைமாட்சி கற்று இன்புறத்தக்கது.

காடுடைய சுடலைப்பொடி பூசி:

சர்வசங்கார காலத்து எல்லா உலகமும் தத்தங்காரணத்துள் முறையே ஒடுங்க காரணங்கள் யாவும் இறுதியாக இறைவனிடம் ஒடுக்கப்பெறும் போது நிகழ்வது. மகா சங்கார்ரமாவது நிவர்த்தியாதி பஞ்ச கலைகளிலும் அடங்கிய எல்லாப் புவனங்களையும் சங்கரிக்கின்ற நிலை. அப்போதுதான் எல்லாம் சுடலைக் காடாகும், என உரை எழுதுவார். இறைவன் ஆதியும் அந்தமுமாகி அனைத்தையும் தன்னுள் கொண்டு அருளுகின்ற பேருபகாரத்தை எடுத்துரைக்கிறார். இறைவனுடைய பெருமையையும் உயிர்களின் சிறுமையையும் காட்டுவது தன்னடக்கத்துடன் மெய்ப் பொருளைத்தேட வேண்டும் என்பதை உணர்த்துவதாக அமைகிறது. உள்ளங்கவர்தலாவது, சர்வ சங்கார காலத்து உயிர்கள் அவனையன்றி அறியாவாறு ஆட்கொள்தலினால் உள்ளங்கவர்கள்வன் என விளக்குகிறார்.

ஏடுடைய மலரான்:

ஏடு - இதழ்; மலரான் - பிரமன்; பிரமன் வழியாடுசெய்த தலமாதலின் இறைவற்குப்பிரம புரீசர் என்பதும் தலத்திற்குப் பிரமபுரம் என்பதும் பெயராயிற்று எனத்தனது உரையை நிறைவு செய்யும் மகாவித்துவான் தம் உரையைத் தொடர்ந்து பண்டை உரை ஆசிரியர்கள் தந்துள்ள அரிய உரை விளக்கங்களையும் பொன்னே போலப் போற்றித்தம் வுரையில் பதிவு செய்யும் அவர்தம் பெருமிதம் அவர்க்கே உரியதாகும்.

இத்திருப்பாடலில் பண்டை உரையாசிரியர் கயப்பாக்கம் சதாசிவச் செட்டியார், ஸ்ரீமத் செப்பறைச்சுவாமிகள் ஆகிய இருவர் கருத்தைப்பதிவு செய்தும் அதை ஒட்டிய செய்திகளை எழுதி உரையை நிறைவுசெய்வார்.

பீடுஉடைய பிரமாபுரம் எனவே பிரமன் வழிபட்டதலம் என்பது கூறியாயிற்று. "ஏடுடைய மலரான் முனைநாள் பணிந்து ஏத்த அருள்செய்த" என்ற தொடர் பிரமனைக்குறிக்காது, இந்நாயனாரே முற்காலத்து ஏடுடைய மலரான் பூசித்த

காரணம்பற்றி இங்ஙனம் கூறினார் எனச் சதாசிவச் செட்டியார் விளக்கத்தை எடுத்துரைப்பது சிந்தனைக்குரியதாகும்.

முற்பிறப்பில் முயன்றதவ முயற்சியே திருஞானசம்பந்தப் பிள்ளையாருக்கு இப்பிறப்பில் மூன்று வயதிலேயே கைகூடியது என்பதை உறுதிசெய்வதாகும். திருவள்ளுவரின் "தவமும் தவமுடையார்க்காகும்," "நினைக்கப்படும்" என்ற தொடர்கள் முன்னை முயற்சி இம்மையில் கைகூடும் என்ற கருத்தை வலியுறுத்துவதாகும். அந்த வகையில் திருசதாசிவச் செட்டியாரின் விளக்கம் அரிய சிந்தனையாகும்.

ஐந்தொழிலுக்கும் உரிமை உடையவன் இறைவன் ஒருவனே என்னும் மெய்ப்பொருட் செய்தி இப்பாடலின்கண் அமைந்திருப்பதை இத்திருப்பாடலுக்கு உரை எழுதிய கயப்பாக்கம் சதாசிவச் செட்டியார் அவர்கள் "விடையேறி" என்பது நித்தியத்தன்மையை வேண்டிய அறக்கடவுளை வெள்விடையாகப் படைத்து ஊர்தியாகக் கொண்டதால் சிருஷ்டியும், "மதிசூடி" என்பது சந்திரனுக்கு அபயம் தந்து திருமுடியில் ஏற்றிக்காத்தலால் திதியும், "பொடிபூசி" என்பது சர்வசங்கார காலத்து நிகழ்ச்சியை அறிவித்தலால் சங்காரமும், "கள்வன்" என்பது இறைவன் எல்லாவுயிர்களிடத்தும் நீக்கமற நிறைந்திருந்தும் அவைகள் வினைப்போகங்களை நுகர ஒளித்து நிற்பதால் திரோபவமும், "அருள் செய்த" என்பது அனைவருக்கும் அருள்செய்யும் அனுக்கிரகமும் ஆகிய ஐந்தொழிலையும் விளக்கும் குறிப்பு என்பார்கள்.

படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழிலுக்கும் உரிமைபூண்டவன் இறைவன், அவனே முழுமுதற்கடவுள், அவனை வழிபடுதல் இவ்வுலக இடர் நீங்கி இன்பம் துய்க்கவும் வீடுபெறவும் இன்றியமையாதது என்பதை எடுத்துரைப்பதாகும்.

அடுத்துஸ்ரீமத் செப்பறைச் சுவாமிகள் இத்திருப்பாடலுக்குக் கூறும் விளக்கத்தை உரையாசிரியர் எடுத்துவைக்கிறார்.

தோடுடைய செவியன் முதலாயின இறைவனது எண் குணங்களாகிய சிறப்பு இயல்புகளை உணர்த்துவன என்றும் பிரமாபுரம் விடையேறி முதலியன இறைவனது தசாங்கங்களைக் குறிப்பால் உணர்த்திநிற்பன என்றும் "விடையேறி", "பொடிபூசி", "உள்ளங்கவர்கள்வன்" என்பன முறையே இறைவனுடைய மூன்று திருமேனிகளாகிய உருவம், அருவுருவம், அருவம் என்ற மூன்றையும் குறித்து நிற்பன என்றும் எழுதியுள்ளார்கள் என்ற செய்தியையும் தம் உரையில் தருகின்றார்கள்.

சேக்கிழார் "மறைமுதல் மெய்யுடன் எடுத்த எழுதுமறை" என்பதால் பிரணவத்தின் முதலாகிய ஓங்காரத்தைச் சிவசத்தியின் உண்மைச் சொரூபமாகிய தகரவித்தையின் அடையாளமாகிய 'த்' என்பதோடு சேர்த்து "தோ" என்று தொடங்கியதாகக் குறிப்பிடுவார்கள். பன்னிரண்டாம் திருமுறையில் உலகெலாம் என்று முடிவதனையும் இதனோடு சேர்த்துத் திருமுறை முழுவதுமே வேதமூலமாகிய பிரணவத்துள் அடங்கியது என்பது குறிப்பு என்பார்.

மகாவித்துவான் ச. தண்டபாணிதேசிகர் எழுதும் உரை பதவுரையாக இல்லாமல் பல்துறை அறிவையும் பல்வேறு அறிஞர்கள் கூறியுள்ள கருத்தையும் நமக்கு அளிக்கிறது. தமிழ், வடமொழி மரபுகளைத்தழுவி அதன்கண் பொதிந்துள்ள மெய்ப்பொருட் செய்திகளை கற்போர் உள்ளம் கொள்ளும் வண்ணம் நயம் பட எடுத்து இயம்பும் உரைத்திறம் அவரிடம் செம்மாந்து நிற்பதை அறியலாம்.

மூலநூல், அதனையொத்த பிறகவிஞர் உள்ளம், பாரம்பரிய மரபுகள், உரை ஆசிரியர்கள் கூற்று ஆகியவற்றை எடுத்துவைத்து இறுதியாகத்தாம் உணர்ந்தவற்றையும் உறுதிபட எடுத்துரைக்கும் திறம் அவர்தம் உரையில் ஆழமாகவேர் விட்டிருப்பதைக் கண்டு கற்போர் உயிர் தளிர்ப்பதை உணரலாம்.

# மயிலைநாதரின் எழுத்திலக்கணம்

பேரறிஞர் பெ.சுயம்பு

## மயிலைநாதர்

நன்னூல் உரையாசிரியர். இன்று கிடைக்கப்பெறும் நன்னூல் உரைகளுள் இவரது உரையே காலத்தால் முந்தையது. மயிலைநாதர் குறித்துப் பெரும் பேராசிரியர் உ.வே.சாமிநாதய்யர் பின் வருமாறு குறிப்பிடுகிறார்.

"மயிலை நாதர் என்னும் பெயரை உடைமையாலும் இவ்வுரையுள், சைன சமய வழக்குகளையும், அச்சமய நூற்செய்யுட்களையும் ஆங்காங்கு எடுத்துக் காட்டியிருத் தலாலும், அருகதேவனைப் பலபடப் பாராட்டியிருத்தலாலும் இவர் சைன மதத்தினராக எண்ணப்படுகிறார்... இந்நூலை ஆக்குவித்த சீயகங்கனாலோ அல்லது அவன் பரம்பரையில் விளங்கிய ஓர் உபகாரியினாலோ இவர் ஆதரிக்கப் பெற்று இந்நூலுக்கு உரை செய்யும்படி தூண்டப்பெற்றவரென்று தோற்றுகின்றது"

நன்னூலுக்கு உரை விளக்கம் செய்த மயிலைநாதர், ஆங்காங்கு தம் இலக்கணக் கொள்கைகளைப் புலப் படுத்தியுள்ளார். இங்கு எழுத்திலக்கணம் குறித்த சில கருத்துக்கள் சுட்டப்பெறுகின்றன.

## எழுத்து விளக்கம்

"எழுதப்படுதலின் எழுத்தெனக் கொள்க" (நன்னூல் 55) என்பது எழுத்திற்கு மயிலை நாதர் தரும் விளக்கம். இவ்விளக்கம் "எழுதப் படுதலி னெழுத்தே" என்ற யாப்பருங்கல விளக்க உரையில் காணப்படுகிற நூற்பாவை ஒட்டி வரையப்பட்டதாகத் தோன்றுகிறது. இந்நூற்பாவை இலக்கண விளக்கம் முதலான பிற்கால இலக்கண நூல்களிலும் காணமுடிகிறது.

எழுத்திற்கு மயிலைநாதர் தருகிற இவ்விளக்கம் வரிவெழுத்தை அடிப்படையாகக் கொண்டது. மொழிமுதற் காரணமாம் அணுத்திரளொலி எழுத்து (நன்னூல்), மொழி முதற் காரணமாம் நாத காரியவொலி எழுத்து, (இலக்கண விளக்கம், சுவாமிநாதம்) என்று ஒலி வடிவைக் கருத்திற்கொண்டு இலக்கணிகள் எழுத்திற்கு வரையறை இலக்கணம் (definition) )வரைந்துள்ளனர். ஆயினும் உரைகாரர்கள் எழுத்து வடிவை நோக்கி எழுத்தினை விளக்குகின்றனர். தமிழ் இலக்கண விதிகள் பெரும்பான்மையும் எழுத்து மொழி அமைப்பை ஒட்டி வரையப்பட்டுள்ளன. அதனால் இந்த எண்ணம் உரையாசிரியர்களைப் பற்றி இருக்கலாம். மேலும், எழுது (வரியாக அமை) என்னும் வினை வலி இரட்டித்து எழுத்து என்ற பெயரைக் கொண்டுள்ளது. இந்தச் சொல்லாக்கம் கருதியும் மயிலைநாதர் போன்றோர் வரிவடிவை எழுத்திற்கு விளக்கமாக ஏற்றனர் என்றும் கருதமுடியும்.

வரிவடிவை அடிப்படையாகக் கொண்டு விளக்கம் தரினும், ஒலிஎழுத்தே எழுத்ததிகாரத்தில் விவரிக்கப்படுகிறது என்பதை மயிலைநாதர் திட்டவட்டமாகக் கூறுகிறார் (நன்னூல் 256)

முதலெழுத்தும் சார்பெழுத்தும்

"தாமே தமித்து நிற்கையின் முதலெழுத்தென்றாயின. அவையே தம்மொடு தாம் சார்ந்தும் இடஞ்சார்ந்தும் இடமும் பற்றுக்கோடும் சார்ந்தும் விகாரத்தால் வருதலிற் சார்பெழுத்தென்றாயின வெனக் கொள்க"- இது முதல், சார்பெழுத்துக்களுக்கு மயிலைநாதர் தருகிற விளக்கம்.

முதல் சார்பெழுத்துக்களின் இயக்கம், அவற்றின் தோற்றநிலை அடிப்படையில் இவ்விளக்கம் காணப்படுகிறது. மொழிக்கு அடிப்படை (மூல) ஒலிகளாக அமைவன முதல் எழுத்துக்கள். அவை தாமே தமித்து வழங்கும் ஆற்றல் உடையவை. ஆனால் சார்பெழுத்துக்களோ வேறானவை. முதல் எழுத்துக்களுள் சில

தாம் சார்ந்துள்ள பிற எழுத்துக்களின் ஒலியாற்றலால் பாதிக்கப்பெற்றும், அவை பற்றி வருகிற எழுத்துக்களின் ஆற்றலுக்கு உட்பட்டும் ஒலிமாற்றத்திற்குட்படுகின்றன. இவ்வொலிமாற்றம் குறுக்கமாகவோ, நீட்சியாகவோ அமைகிறது. இம்மாற்றமே சார்பெழுத்துக்களாக உருப்பெற்றுள்ளது. அதாவது, முதல் எழுத்துக்களின் ஒலிமாற்றமே (விகாரமே) சார்பெழுத்தாகிறது. இவ்வாறு மயிலைநாதர் கருதுகிறார்.

சார்பெழுத்துக்களின் எண்ணிக்கையில் தொல்காப்பியமும், நன்னூலும் வேறுபடுகின்றன. குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் எனும் மூன்றும் தொல்காப்பியத்தில் சார்ந்து வரல் மரபின என்று கூறப்படுகின்றன. ஆனால் நன்னூல் இவற்றுடன், உயிர்மெய், உயிரளபெடை, ஒற்றளபெடை, ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம் ஆகிய ஏழனையும சேர்த்துப் பத்தும் சார்பெழுத்தாகும் என்று கூறுகிறது.

தொல்காப்பியத்தில் நன்னூல் கூறுகிற பத்துச் சார்பெழுத்துக்களுக்கான குறிப்புக்களும் இடம்பெற்றுள்ளன. எனினும் அந்நூல் மூன்றனை மட்டுமே சார்பு எழுத்தாகக் கருதுகிறது. இந்த வேறுபாட்டினைக் கருத்திற் கொண்ட மயிலை நாதர் நன்னூலின் கொள்கையை நியாயப்படுத்தும் வகையில் விளக்கம் தருகிறார். அவ்விளக்கம் வருமாறு

"என்னை? எழுத்தெனப் படுப, அகரமுதனகர விறுவாய் முப்பஃதென்ப, சார்ந்துவரன் மரபின் மூன்றலங்கடையே" (தொல்.நூன்.க) என ஆசிரியர் தொல்காப்பியனாரும் இவ்வாறு முதல்சார்பென வகுத்துக் கொண்டாரென்க. அஃதே, அவர் சார்பெழுத்தென மூன்றே கொண்டாராலோவெனின், அஃதே நன்று சொன்னாய் ஒழிந்தவை எப்பாற்படுமென்றார்க்கு மூன்றாவதோர் பகுதி சொல்லலாவதின்மையானும் முதலெழுத்தாந்தன்மை அவற்றிற்கின்மையானும், சார்பிற் றோன்றுதலானும் இப்பத்தும் சார்பாகவே கொள்ள வேண்டுமென்பது. அஃதே அமைக" (நன்னூல் 59)

நன்னூலின் சார்பெழுத்துக் கொள்கை அவிநயனாரைத் தழுவியது என்பதை மயிலைநாதர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"ஒற்றளபெடையும், ஐகாரக்குறுக்கமும், ஔகாரக்குறுக்கமும், மகரக்குறுக்கமும், ஆய்தக்குறுக்கமும் யாண்டுப் பெற்றாமோவெனின், வன்மையொடு ரஃகான் ழஃகா னொழிந்தாங், கன்மெய்யாய்தமோ டளபெழு மொரோவழி, அளபெடை தனியிரண் டல்வழி ஐஔ, உளதா மொன்றரை தனிமையுமாகும், பதினெண் மெய்யுமதுவே மவ்வோ, டாய்தமு மளபரை தேய்தலுமுரித்தே என்றார், ஆசிரியர் அவிநயனாரு மெனக் கொள்க" (நன்னூல் 59)

எழுத்து முதல், சார்பு என இருவகையாகவே அடங்குதற்குரியது. அவற்றின் வேறாக வகைப்படுத்துதல் இயலாது என்பது மயிலைநாதரின் கொள்கை.

எழுத்தின் முறை

தமிழ் நெடுங்கணக்கு அகரத்தை முதலாகக் கொண்ட முறை உடையது. இதற்கு மயிலைநாதர் சில காரணங்களைச் சுட்டுகிறார்.

அகரம் தானே நடந்தும் நடவா உடம்பை நண்ணியும் நடத்தலானும், அரன் அரி அயன் அருகனென்னும் பரமர் திருநாமத்திற்கு ஒரு முதலாயும், அறம் பொருளின்பமென்னும் முப்பொருளின் முதற்பொருட்கும், அருள் அன்பு அணி அழகு முதலாயின நாற்பொருட்கும் முதலாயும் வருதலானும் முன்வைக்கப்பட்டது. (நன்னூல் 72)

இவ்விளக்கம் அறிவார்ந்த நிலையில் அமையவில்லை. அகரம் வாயைத் திறத்தலாகிய அங்காந்த அளவில் பிறக்கிறது. இந்த அங்காத்தல் பேசும் முயற்சியின் தொடக்க நிலையாகும். இதனால் அகரம் முதலில் வைக்கப்பெற்றது என்பதே ஏற்புடையது.

வரிவடிவம்

குற்றியலிகரமும், குற்றிலுகரமும் மேலே புள்ளி இட்டு எழுதும் வழக்கமும் தம் காலத்து நிலவிதை மயிலைநாதர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"தாது, ஏது என்றற்றொடக்கத்து ஆரியமொழிகளும், எட்டு, கொட்டு என்றற்றொடக்கத்துப்பொது மொழிகளும், குன்றியாது, நாடியாது, எட்டியாண்டுளது என்றற்றொடக் கத்தும் புணர்மொழிப் பொருள் வேறுபாடுகளும், அறிதற் பொருட்டுக் குற்றுகரக் குற்றிகரங்களுக்கு மேற்புள்ளி கொடுப்பாரும் உளரெனக் கொள்க" (நன்னூல் 97)

மொழிமுதல்

அங்ஙனம், எங்ஙனம் போன்ற சொற்களில் ஙகரம் மொழிக்கு முதலில் வருவதாக நன்னூல் (101) கருதுகிறது. இக்கருத்து ஏற்புடையதன்று. எனினும், மயிலை நாதர் நூலாசிரியரைக் காப்பாற்றும் நோக்கில் நன்னூற் கருத்து உடன்படுதலோடு அமையாது, சான்றாக அவிநயனாரையும் சுட்டிக் காட்டுகிறார்.

"ஙகரம் மொழிக்கு முதலாமோவெனின், கசதபஙவ்வே யாதியு மிடையும், டறவிடை ணனரழ லளஇடை கடையே, ஞநமய வவ்வே மூன்றிடமென்ப என ஙகரம் ஈரிடத்தும் நிற்குமென்றார், ஆசிரியர் அவிநயனாருமெனக் கொள்க" (நன்னூல் 101)

தொல்காப்பியம் நுந்தை எனும் முறைப்பெயரில் குற்றியலுகரம் மொழிமுதலில் வருவதாகக் கூறுகிறது. ஆனால், இச்சொல்லில் மொழிமுதலில் மெய்யே (ந் + உ)வருகிறது. மயிலைநாதர் இதனை ஏற்கவில்லை. இதனை அவர் இவ்வாறு கூறுகிறார்.

"குற்றியலுகர முறைப்பெயர் மருங்கி, னொற்றிய நகரமிசை நகரமொடு முதலும் (மொழி மரபு 32) என ஆசிரியர் தொல்காப்பியனார் இவ்வாறு குற்றியலுகரம் மொழிக்கு முதலாமென்றாராலோவெனின், நுந்தையுகரங் குறுகி மொழி

முதற்கண், வந்த தெனினுயிர்மெய் யாமனைத்தும்- சந்திக்குயிர்முதலா வந்தனையு மெய்ப்புணர்ச்சியின்றி, மயலணையு மென்றதினை மாற்று இவற்றை விரித்துரைத்து விதியும் விலக்கும் அறிந்து கொள்க."

நுந்தை என்னும் சொல் பிற்காலத்தில் உந்தை என்ற மாற்று வடிவத்தையும் பெற்றுள்ளது. மொழிமுதலில் நகரம் இழந்து, உந்தை என்று ஒலிக்கப்பெற்ற நிலை தொல்காப்பியக் காலத்திலேயே அமைந்துவிட்டது. இந்த ஒலிப்பு மாற்றமே தொல்காப்பியம் குற்றியலுகரம் மொழி முதலில் வருகிறது என்று கூறக் காரணமாகும். எனினும் தொல்காப்பியம் எழுத்து வழக்குச் சொற்களை அடிப்படையாகக் கொண்டு, இலக்கணம் விவரிக்கிற அணுகுமுறை காரணமாக நுந்தை என்ற சொல்லில் குற்றியலுகரம் மொழிமுதல் என்று கூற வேண்டியதாயிற்று.

தொல்காப்பியம் கூறும் இந்த விதி பிறிதொரு மொழி வளர்ச்சியினையும் புலப்படுத்துகிறது. முற்றியலுகரம் நாளடைவில் குற்றியலுகரமாக ஒலிக்கலாயிற்று என்பதே அந்த வளர்ச்சி. இக்கால மொழியில் பெரும்பான்மையும் முற்றியலுகர ஒலிப்புக் காணப்படவில்லை. குற்றியலுகரமே வழக்கிலுள்ளது. (இதழ்களைக் குவித்து ஒலிப்பது முற்றியலுகரம்; குவிவின்றி ஒலிப்பது குற்றியலுகரம்)

ஐ,ஔ

ஐகாரம் அஇ, அய் என்றும் ஔகாரம் அஉ, அவ் என்றும் வழங்கப்பட்டன. இதனை நன்னூல் ஒத்து இசைக்கும் என்று குறிப்பிடுகிறது. மயிலைநாதர் அஇ, அய். அஉ, அவ் என்று வழங்குதலைப் போலி என்று சுட்டுகிறார்- போல விசைக்குமெனவே அவை ஆகா; போலியாமெனக் கொள்க. இங்கு ஐ, ஔ என்ற வடிவங்களை மட்டுமே அவர் உடன்படுகிறார்.

ஐ, ஔ என்னும் கூட்டொலிகளை அஇ, அய்; அஉ, அவ் என்று ஒருசார் சீர்த்திருத்தவாதிகள் எழுதினர்; ஆனால்

அவ்வழக்கினை இலக்கண அறிஞர்கள் ஏற்கவில்லை என்பதை இங்கு அறிய முடிகிறது.

செய்யுள் விகாரங்கள்

செய்யுள் விகாரங்களை மயிலைநாதர் தோன்றல், திரிதல், கெடுதல் எனும் மூன்றனுள் அடக்கிக் காட்டுகிறார்.

விரித்தல் தோன்றலாகவும், வலித்தலும், மெலித்தலும், நீட்டலும், குறுக்கலும் திரிபாகவும், தொகுத்தலும் மூவிடத்தும் குறைதலும் கெடுதலாகவும் அடக்கிச் செய்யுள் விகாரம் இம்மூன்றுமெனவும் அமையும் (நன்னூல் 155)

தொண்ணூறு, தொள்ளாயிரம்

எட்டாற் பெருக்கின பத்து எண்பதானாற் போலவே ஒன்றானப் பத்தாற் பெருக்கின பத்தும் நூறும் தொண்ணூறும் தொள்ளாயிரமுமாமென்க (நன்னூல், 193)

தொண்ணூறு என்பது பத்துக் குறைந்த நூறு என்றும் தொள்ளாயிரம் என்பது நூறு குறைந்த ஆயிரம் என்றும் மயிலைநாதர் கருதுகிறார்.

தொகுப்புரை

1. எழுத்து என்பதற்கு வரிவடிவத்தின் அடிப்படையில் வரைவிலக்கணம் தரப்பெற்றுள்ளது. எழுத்திலக்கணம் ஒலி வடிவத்தின் அடிப்படையிலானது.
2. எழுத்துக்கள் முதல், சார்பு என்ற இருவகையாகவே பகுத்தற்கு உரியன.
3. குற்றியலிகரமும், குற்றியலுகரமும் புள்ளியிட்டு எழுதப்பெற்றன.
4. நுந்தை என்பது மெய்ம் முதலான சொல்
5. அய், அவ் என்பன போன்று இரு வடிவங்களால் எழுதுதல் போலியானவை.

# திருவெம்பாவையில் அகப்பொருள்

*பேரறிஞர் சுப.அண்ணாமலை*

## ஏதேனும் ஆகாள்

மாணிக்கவாசகர், சிவபெருமானைக் காதலனாகக்கொண்டு, தாம் காதலியாக இருந்து, அனுபவித்த உணர்வு நிலைகளைத் திருவெம்பாவையில் வெளியிடுகின்றார். மார்கழி மாதத்தில், நாடுசெழிக்க, நல்ல மழை பொழியவேண்டும் என்றும், நல்லறமாகிய இல்லறம் நடத்துவதற்குத் தமக்குச் சிறந்த கணவன்மார் வாய்க்கவேண்டும் என்றும், கன்னிப்பெண்கள் பாவைநோன்பு மேற்கொள்வதை ஒட்டி, அவர்கள் பாடுவதுபோலப் பாமாலை பாடுவதற்குத் திருவண்ணாமலையில், மணிவாசகருக்கு வாய்ப்புக் கிடைத்தது. அதை, தமது கடவுள்-காதல் அனுபவத்தை வெளியிடுவதற்குப் பயன்படுத்துகின்றார்.

அதிகாலைப் பொழுதில், பொய்கையில் நீராடப் போவதற்காகக் கன்னிப்பெண்கள், தம்முள் ஒவ்வொருத்தியையும் அவள் வீட்டினின்றும் அழைத்துச் செல்வர். தூங்கிக் கிடப்பவரை எழுப்புவர். இங்ஙனம், உறங்கும் கன்னியரை எழுப்புவோராகவும் உறங்கியெழுந்தோ, உறங்குவோர் போலவோ உள்ள பெண்களாகவும் திருவெம்பாவையில் பலரையும் படைக்கின்றார் மணிவாசகர். அவர்களின் இறையனுபவமாக அவர் பாடும் செய்திகள், உண்மையில், அவரது அனுபவம் பற்றியவையே என்று கூறலாம்.

காதல் வயமானவர்கள், அதனால் கட்டுண்டு, தம்மை மறந்து இருப்பார்கள். பெண்கள் இயல்பாகவே நாணம் உடையவர் ஆதலால், காதல் வசப்பட்டாலும் முதலில் நாணத்தின் எல்லையை மீறாமல் இருந்து, பின்பு காதல் கட்டு மீறினால், தம்மையே மறந்து, பரவசமாவர்.

மணிவாசகநாயகி இவ்வாறு பரவசமாகிக் கிடந்ததை திருவெம்பாவையின் முதல்பாட்டு விளக்குகின்றது. இதில் இரண்டு பெண்களின் நிலைகள் ஒப்பிடப்படுகின்றன. ஒருத்தி, அப்பொழுது படுக்கையில் கிடந்தவள், ஒருத்தி முன்பே எழுந்து, நீராடப்புறப்பட்ட பெண்களின் கூட்டத்தில் சேர்ந்து கொண்டவள்.

இந்தப்பெண்கள், இன்னும் படுக்கையில் கிடந்த பெண்ணின் வீட்டுவாயிலில் நின்று, சிவபிரானின் புகழைப் பாடுகின்றனர்.

திருவண்ணாமலையில், திருமாலும் பிரமதேவனும், ஆதியாகிய திருவடியையும், அந்தமாகிய திருமுடியையும் தேட, அவர்களால் காணமுடியாதவனாகத் தனது இயல்பான நிலையில், அதாவது சொரூபநிலையில் விளங்கிய புகழைப் பாடுகின்றனர். உறங்குகின்ற பெண் அதைக்கேட்டும் கண்விழிக்கவில்லை. ஒளிவீசும் அவளுடைய அகன்ற கண்கள், இப்போது தூக்கத்தால் இருள் கவ்விக்கிடக்கின்றன. இதைச் சுட்டிக்காட்டி, அவளை எழுப்பும் பெண்கள்,

ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ்
சோதியை யாம் பாட, கேட்டேயும் வாள் தடங்கண்
மாதே வளருதியோ

என்றும், உனக்கு எப்படித் தூக்கம் வருகின்றது? நீ செவிடும் அல்லவே? வன்செவியோ நின் செவிதான்? என்றும் கேட்கின்றனர்.

ஆம். அவள் செவிடு அல்லள், இறைவனிடம் அன்பில்லாதவளும் அல்லள். அவன் புகழைக்கேட்டவுடன் விழித்து எழுவதுதான் அவள் வழக்கம். ஆயினும் எழுவதற்கு மனமில்லாமல், பொய் உறக்கம் கொண்டு கிடந்தாள். அவளை எழச்செய்வதற்காக, மற்றொரு பெண்ணின் அன்பைப்பற்றிப் பேசத் தொடங்குகின்றனர் தோழியர்.

வீதி முனையிலே, அவர் சிவபெருமானின் அருள் திருமேனியாகிய மகாதேவ வடிவத்தை வாழ்த்திப் பாடிய ஒலியைக் கேட்டவுடனே அவள் விழித்துக் கொண்டாள். விம்மி விம்மி அழுதாள். மகாதேவனின் புகழைக் கேட்டதால் மெய்யுணர்வு வரப்பெற்று, அவனை அகக்கண்ணால் மீண்டும் விம்மினாள்; மெய்ம் மறந்தாள்.

"மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தோலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மி விம்மி மெய்ம்மறந்து"

அவள் தன்னை மறந்தாள். தன் பெயர் மறந்தாள். பாசஞானமும் பசுஞானமும் அவளிடம் விடைபெற்றுப் போயின. பதிஞானம் பெற்றாள், எங்கும், எதிலும், தன் காதலனாம் சிவபிரானின் ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதியே நிறைந்திருப்பதைக் கண்டாள். அதில் ஈடுபட்டு உறவை, உணவை, சுற்றுப்புறத்தை, உலக நினைவை மறந்தாள். மலர்போன்ற படுக்கை, தூங்குவதற்கு வசதியாக இருந்தும், அதில் தூங்கிக் கிடக்காமல், அதிலிருந்து புரண்டு, மெய்மறந்து தனியே கிடந்தாள். கிடப்பது தரை என்ற உணர்வும் அவளுக்கு இல்லை.

போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டு

வாசலில் நின்று பாடுவதைக் கேட்டும், விழித்துக்கொண்டே, பொய்யாய்த் தூங்குபவள் போலக் கிடப்பவளுக்கும், இவளுக்கும் எத்தனை வேறுபாடு. இவள் கேட்டது மகாதேவனாகிய தடத்த வடிவத்தின் புகழ். தடத்தம் என்பது நாம் எல்லாம் நன்றாகப் பார்த்து அறியும்படி திருவுருவம் கொண்டு, சிவபெருமான் எழுந்தருளி வரும் நிலையாகும். அந்த அழகிய வடிவத்தைப் பாடக்கேட்டு, சிவபிரானின் இயல்பான, சொருபத்தை சோதியை நினைத்துக்கொண்டு காதலால் கசிந்துருகத் தொடங்கி விட்டாள். பின் மெய்மறந்தாள்.

இப்படி, எல்லாம் மறந்திருந்தவளை என்னவென்று குறிப்பிடுவது?

"ஏதேனும் ஆகாள் கிடந்தாள்"

என்கிறார் மணிவாசகர். அவள் இறந்தவள் போலே கிடந்தாள். ஆனால் காதல் உலகில் வாழ்ந்தாள். உலகியலில் அவள் எதிலும் சேர்த்தி அல்லள். காதலால் கனிந்துருகி, இறைவனது அருள்வெள்ளத்தில் அழுந்திக் கிடந்தாள்.

"கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை
வல்லாளன் தென்னன் பெருந்துறையான் பிச்சுஏற்றி
கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன் கருணை
வெள்ளத்து அழுத்தி"

என்று தமது அனுபவத்தை நேர்முகமாகவே மணிவாசகர் குறிப்பிடுவார். ஆதலால் இங்கு ஏதேனும் ஆகாள், கிடந்தாள் என்று கூறப்படும் பெண், உண்மையில் மணிவாசக நாயகியே ஆவார்.

அவரது இக்காதல் நிலையைக் கூறும் திருவெம்பாவை முதற்பாடல் வருமாறு

"ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின் செவிதான்
மாதேவன் வார்கசுல்கள் வாழ்த்திய வாழ்த்தொலி போய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதானும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே
ஈதேஎம் தோழி பரிசேலோர் எம்பாவாய்".

முன் இதழ்த்தொடர்ச்சி...

# திருவள்ளுவரைத் தெரிந்து கொள்ளுங்கள்

பேரறிஞர்.நாபா

## தெரிந்துதெளிதல் - அதிகாரம் 51

தெரிந்து தெளிதல் என்பது ஆராய்ந்து தெளிதல் என்பதாம். இங்குத் தெளிதல் நம்புதல் என்னும் பொருளில் ஆளப்பட்டுள்ளது. அரசர் அல்லது ஓர் ஆட்சித்தலைவர், அரசுத் தொழிலுக்கு ஏற்ற அமைச்சர், படைத்தலைவர், தூதர், ஒற்றர், நண்பர் முதலியோரை ஆராய்ந்து பார்த்துத் தேர்ந்தெடுத்தல் வேண்டும். இவர்களைப் பிறப்பு, குணம், அறிவு என்பனவற்றையும், அவர்தம் செயல்களையும், காட்சி, கருத்து, ஆகமம் என்னும் அளவைகளால் ஆராய்ந்து தெளிதல் வேண்டும். மூவகை வலிமைகளையும், காலமும், இடனும் அறிந்து பகைவர் மீது படையெடுத்துச் செல்வோனுக்கு, படைவீரர்கள் ஊக்கத்தோடு செயல்படவும், பகைவரால் வஞ்சிக்கப்பட்டு ஓடிப்போகாமலிருக்கவும் தெரிந்து தெளிதல் இன்றியமையாதது. ஆட்சியில் பல்வேறு நிலைகளில் பணிபுரிவோர் கடமையுணர்வும், நாட்டுப்பற்றும், நம்பிக்கையும் மனச்சான்றும் உடையவர்களாக இருத்தல் வேண்டும் எனவே ஆட்சித்தலைவர் (பிரதமர்) மேற்கண்ட அலுவலர்களை விழிப்புடன் தேர்ந்தெடுத்தல் வேண்டும் என்பது இவ்வதிகாரத்தில் விரிவாகப் பேசப்படுகிறது.

தெரிந்து தெளிதல் என்னும் அதிகாரத்தில் திருவள்ளுவர் பின்வரும் அறிவுரைகளை ஆட்சியாளருக்கு வழங்கியுள்ளார்.

1. குணம் உடைய அலுவலர்களைத் தெளிக
2. தெளிதற்குரிய கருவி
3. தெளியப்படாதார் யார் யார்?
4. தவறான அலுவலர்களைத் தெளிதலால் வரும் இழுக்கு

ஓர் அரசினால் தெளியப்படும் ஓர் அலுவலர் அல்லது உயர் பணியாளர் ஒருவர் அறமும், பொருளும், இன்பமும், உயிருக்கு வரும் அச்சமும் ஆகிய சோதனைகள் நான்கின் திறத்து மனவியல் ஆராய்ந்து பின்பு தெளியப்படும்.

அறம் (சோதனை 1)

அரசு காரியங்களுக்குத் தெரிந்தெடுக்கப்படும் ஒருவர் நேர்மை, வஞ்சியாமை முதலிய அறவுணர்வுகள் உடையவரா என்பதை நேரில் பழகியோ, தக்கார் சிலர் மூலம் கேட்டறிந்தோ தெரிந்து கொள்ள வேண்டும்.

பொருள் (சோதனை 2)

பொருளின் மீது பேராசை உடையவரா? கையூட்டுப் பெறும் இயல்பினரா? பதவியைப் பணத்திற்காகத் தவறாகப் பயன்படுத்துபவரா? என்பன போன்றவற்றை ஆராய்ந்து அறிதல் வேண்டும்.

இன்பம் (சோதனை 3)

தேர்ந்தெடுக்கப்படவிருக்கும் ஆள் காமஇச்சையினரா, பெண்களுக்கு இடம் கொடுப்பவரா, இன்பத்துறையில் எளியவரா என்பன போன்றவற்றை ஆராய்ந்து அறிதல்

உயிரச்சம் (சோதனை 4)

பகைவர்க்கு அஞ்சியவரா? அரசு காரியங்களுக்குச் சில சூழ்நிலைகளில் உயிர்விடவும் நேரலாம். அதற்கு அஞ்சிப் பணிந்து பகைவர்க்கு வசப்பட்டுவிடுபவரா போன்ற இயல்புகளையும் ஆராய்தல் வேண்டும்.

மேலேகண்ட நான்கு வகைகளாலும் உறுதியாக இருப்பவர் என்றால், அத்தகையவரையே உயர் பதவிகளுக்கு நியமித்தல் வேண்டும். நேர்மையும் ஒழுக்கமும் இல்லாத - பொருளின் மேல் பேராசை கொள்ளாத பெண்ணாசைக்கு இடந்தராத - நாட்டுக்காக உயிர்விடுதற்கும் அஞ்சாதவர்களையே உயர் பதவிகளுக்குத் தெரிந்தெடுத்தல் வேண்டும். தவறானவர்களைத் தேர்ந்தால் நாட்டுக்குக் கேடு சூழ்வது உறுதி.

மேலும் தேர்ந்தெடுக்கப்படவிருக்கும் ஒருவர் 1.உயர்குடியில் பிறந்தவராயும் 2.குற்றங்கள் புரிந்திராதவராயும் 3.பழிக்கு அஞ்சுபவராயும் 4.நாணம் உடையவராயும் இருத்தல் வேண்டும். குடிப்பிறப்பு என்பது சாதிபற்றியது அன்று. நல்ல குடும்பம் - நல்லபாரம்பரியம் உடைய குடும்பத்தில் தோன்றுதல். குற்றங்களாவன: செருக்கு, கோபம், காமம், பொருளின் மீது

கடும் பற்றுள்ளம், கழிவிரக்கம், மதம் ஆகிய அறுவகைக் குற்றங்களும் இல்லாமையும், சோம்பல், தவறு செய்தல், கூடாநட்பு, கூடாஒழுக்கம் முதலியன இல்லாமையும் ஆகும். மேற்காட்டிய குற்றங்கள் (குறைகள்) உடையவரை உயர்பதவிக்கு அமர்த்தல் கூடாது என்பதாம். இவ்வாறெல்லாம் ஆராய்ந்து ஒருவரைத் தேர்ந்து தெளிந்தாலும், சிலர் நேர்மாறாக நடப்பதும் உண்டு. எனவே, மிக்க விழிப்புடன் தானும் ஆராய்ந்து அறிந்தும் பெரியோர்பால் கேட்டறிந்தும் தெளிதல் வேண்டும்.

குணமும் குற்றமும்

உலகில் குணமே உடையவரும் குற்றமே உடையவரும் இலர். இரண்டும் கலந்தே இருக்கும். ஒருவருடைய குணங்களையும், குணக்கேடுகளாகிய குற்றம் குறைகளையும் ஆராய்ந்து, அவற்றுள் மிக்கவற்றையும் ஆராய்ந்து பார்த்து, குணங்கள் பலவாகவும், குற்றங்கள் சிலவாகவும் இருப்பவரைத் தெரிந்து தெளிக என்கிறார் திருவள்ளுவர். குணங்களைவிடக் குற்றங்கள் பலவாக உள்ளவரைத் தெளிதல் தகாது. குணங்களே உடையவர்கள் உலகத்தில் அரியர் ஆதலின் மேற்கூறிய வகையால் குறிப்பிட்ட அலுவலுக்குத் தகுதியுடையார் யாவர் என அறிந்துகொள்க. அவ்வாறாயின், இதனைப் பாகுபடுத்தி அறிவதற்குரிய வழி-சாதனம்-கருவி யாது? அதனையும் வள்ளுவர் அறிவித்துள்ளார். குடிப்பிறப்பு, பண்பாடு, அறிவு முதலியவற்றால் ஒருவர் அடையும் பெருமையாகிய பொன்னின் மாற்று அறிவதற்கும், சிறுமை ஆகிய பொன்னின் மாற்று அறிவதற்கும், அவரது செயலே உரைகல் ஆகும். உரைகல்-பொன்னின் மாற்றை உரசிப் பார்க்கும் கல். ஒருவர் பெருமைக்குரியவர், அல்லாதவர் என்பதைப் பல சாதனங்களால் அறிய முடியும் என்றாலும், அவரது செயலாற்றும் திறன் கொண்டுதான் முடிவாக அறிதல் கூடும். செயல் செம்மையாக அமையாவிடின், பிற பெருமைகளால் பயனில்லை என்பதாம்.

குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்
என்னும் குறட்பாவையும்,
பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்

என்னும் குறட்பாவையும் சிந்தித்துச் செயல்படவேண்டும்

**உயர்பதவிக்கு உரியர் அல்லார்**

இனி யார் யாரை அரசுப் பதவிகளுக்கு தேர்ந்தெடுத்தல் கூடாது என்பதனைத் தெளிவாகக்கூறுகிறது திருக்குறள். மனைவி, மக்கள், உற்றார், உறவினர் ஆகிய எத்திறத்தாரும் இல்லாத தனி ஆளாக இருப்பவதைத் தேறாது இருத்தல் வேண்டும். ஏனெனில், அப்படிப்பட்டவர் உலகத்தோடு தொடர்பு இல்லாதவர். ஆதலின், அவர் பழிபாவங்களுக்கு அஞ்சமாட்டார். உலகத்தார் பழிப்பனவற்றை விடுவதற்கும், பாராட்டுவனவற்றைச் செய்வதற்கும் ஏதுவாகிய உலகநடை இயல்பு சுற்றம் இல்லாதார்க்கு இல்லாமையால், அவர்கள் தெளியப்படார் என்பது கருத்து.

"அற்றாரைத் தேறுதல் ஓம்புக மற்றவர்
பற்றிலர் நாணார் பழி"

என்னும் குறட்பா மனங்கொள்ளத்தகும்

மற்றொரு சிறந்த ஆலோசனையும் கருதத்தக்கது. ஓர் அரசன் அல்லது நாட்டின் ஆட்சித்தலைவன் பெரிய பொறுப்புள்ள பதவிக்கு ஒருவனைத் தோந்தெடுக்கும்போது, தனக்கும் அவனுக்கும் உள்ள நட்பினாலோ, பிற தொடர்பினாலோ மட்டும் தேர்வு செய்தல் கூடாது. அன்பு அல்லது உறவு அல்லது நட்பு பற்றி அரசன் அறிவிலாரிடம் காரியத்தை ஒப்படைப்பின், அஃது அவரது அறிவின்மையால் கெடும். தேர்ந்தெடுக்கப்பட்டவரது அறிவின்மை வெளிப்படுவதுடன், தேர்வு செய்தவருடைய அறியாமையும் வெளிப்பட்டுக் காரியக்கேடும் உண்டாகும். அஃதாவது, எந்தப் பணிக்கு ஒருவரைத் தேர்ந்தெடுக்கிறோமோ, அப்பணி பற்றிய விரிந்த நுணுக்கமான அறிவும் ஆற்றலும் பயிற்சியும் அவருக்கு இருக்கிறதா என்பது பற்றி ஆராயாமல், வேறு காரணங்களுக்காகத் தேர்ந்தெடுத்தால் (Favouritism & Nepotism) அரசுக்குப் பலவகையான இழப்புக்களும் இழிவுகளுமே ஏற்படும்.

"காதன்மை கந்தா அறிவறியார்த் தேறுதல்
பேதைமை எல்லாம் தரும்"

என்னும் குறள் சிந்திக்கத்தகும். (காதன்மை - அன்பு, அறிவு அறியார் - துறைபற்றிய சிறப்பு அறிவு பேதைமை என்பது எதுவுமே அறியாமை.)

அன்றியும், ஆட்சியாளர், தம்மோடு அல்லது நாட்டின் நலனோடு ஒத்துப் போகாத ஒருவனை, அவனது குடிப்பிறப்பு, குணம், அறிவு முதலியவற்றாலும், செயல்திறனாலும் ஆராயது, வேறுகாரணங்களால் அவனிடம் காரியத்தை (பொறுப்பை) ஒப்படைத்தல், தமக்கு மட்டும் அன்றி, பின்வரும் ஏனோர்க்கும் துன்பத்தையே தருவதாகும். அறியாமையால் செயல்படாமலும், செயல்பட்டாலும் வரும் தவறுகளாலும் அரசுக்குக் கேடே விளையும். தெளிதல் என்பது அவனிடம் பொறுப்பைத் தருதல். நாட்டின் மீதும் குடிகளின் மீதும் உண்மையான பற்றில்லாதவனைத் தெளிதல் கூடாது என்பதாம்.

மேலும், ஓர் ஆட்சித்தலைவர் தான் நினைத்தபடியெல்லாம் அலுவலர்களைத் தேர்ந்தெடுத்துவிடுதல் கூடாது. ஒவ்வொருவரின் திறமைகளையும் ஆராய்ந்து பார்த்துத் தேர்வு செய்தல் வேண்டும். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டபின், அவர்களிடம் எத்தகைய துறைகளை ஒப்படைக்கலாம். என்பது பற்றியும் முடிவு செய்ய வேண்டும். அஃதாவது, அவரவர் ஆற்றலுக்கு ஏற்ற செயலை (வினை) ஒதுக்க வேண்டும். ஆட்சித்தலைவர் ஒருவரை ஆராய்ந்து தக்கவர் என்று அறிந்தபின், அவரது தொழில்நுட்ப அறிவுக்கு ஏற்ற தொழிலை (இலாகாவை) அவரிடம் தருவதில் சந்தேகப்படல் கூடாது. சந்தேகம் இருவழியிலும் இழப்பையே உண்டாக்கும்.

ஆட்சியாளர் ஒருவர் ஒருவனை ஆராயாது தெளிதலும், ஆராய்ந்து தெளியப்பட்டவரிடம் சந்தேகம் கொள்வதும் ஆகிய இரண்டும் ஆட்சியாளருக்கு நீங்காத துன்பத்தைக் கொடுக்கும் என்கிறார் திருவள்ளுவர். அஃதாவது ஓர் அலுவலரை-உயர்அதிகாரியை-ஆராய்ந்து நியமித்து அவரிடம் ஒரு குறிப்பிட்ட துறைப்பொறுப்பை (Protfolio) ஒப்படைத்தபின்னர் குறையொன்றும் புலப்படாத நிலையில் வேண்டுமென்றே சந்தேகப்பட்டால், அந்த அதிகாரி முறையாகச் செய்து வந்த பணியை முன்போல் திறம்படச் செய்யாமலும், இத்துறை நம்மைவிட்டு எப்போதேனும் கைமாறும் என அறிந்து

செயல்படாமலும் காலக்கழிவு உண்டாகும். அன்றியும், பகைவர்க்கு நுழைவாயில் கிடைத்தது போலும் ஆகிவிடும். ஆதலால், தெளிந்து நியமனம் செய்தவரிடம் சந்தேகம் கொள்ளல் ஆகாது என்பது வலியுறுத்தப்படுகிறது. இதனைத் திருவள்ளுவர்,

"தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும்"

என்று தெளிவுபடுத்தியுள்ளார் (ஐயுறவு - சந்தேகம், இடும்பை- துன்பம்)

தெரிந்து வினையாடல் - அதிகாரம் 52

தெரிந்து வினையாடல் என்னும் இவ்வதிகாரம் இன்றைய காலக் கட்டத்தில் மிகமிக இன்றியமையாத அறிவுரைகளையும் அரசியல் ஆலோசனைகளையும் உள்ளடக்கிய ஒன்றாகும். அதிபர் ஆட்சி நடைபெறும் நாட்டில் (Republican form of Government) ஆட்சித் தலைவராகிய அதிபரும் (President of the Republic) மக்களாட்சி நடைபெறும் நாட்டில் (Demacracy or Parliamentary Form of Government) மக்கள் பிரதிநிதிகளால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதமரும் தங்கள் அமைச்சரவையை எவ்வாறு அமைக்க வேண்டும். எத்தகையோர் அதில் இடம் பெறுதல் வேண்டும். எந்தெந்த இலாகாவை - துறையை(Portfolio) யார்யாருக்கு ஒதுக்க வேண்டும் என்னும் ஆட்சியியல் நுணுக்கங்களையும் நன்கு அறிந்து கொள்ளல் வேண்டும். ஏறத்தாழ ஈராயிரம் ஆண்டுககளுக்கு முன் திருவள்ளுவர் இதுபற்றி உரைத்துப் போந்த அரசியல் கருத்துக்கள் இன்றும் முழு விழுக்காடு பயன்படுகின்றன என்பதை அறிய வியப்பாக இருக்கும் அன்றோ? ஆம், காலத்தை வென்றவர் தெய்வப் புலமைத் திருவள்ளுவர். எக்காலத்துக்கும், எந்நாட்டவருக்கும் எச்சமயத்தவருக்கும் பொதுவாகக் கூறியிருக்கும் இவ்வரசியல் சித்தாந்தம் எண்ணுந்தோறும் வியப்பில் ஆழ்த்தும். இவர்தம் அறிவுரைகளின்படி அமைச்சரவை அமைந்து தொழில்பட்டால், நல்லாட்சி நிலவி மக்களுக்குப் பெரும் நன்மைகள் கிடைக்கும் என்பதில் ஐயம் இல்லை.

முன்னைய அதிகாரமாகிய தெரிந்து தெளிதல் என்பதில் கூறப்பட்ட உத்திகளின்படி தேர்வு பெற்ற அரசு அதிகாரிகளை எவ்வாறு ஆளவேண்டும் என்பதைக் கூறுகிறது தெரிந்து வினையாடல் என்னும் அதிகாரம். தொழிலுக்கு உரியவர்களைத் தெளிந்த பின்னர், தொழில்களை (துறைகளை) அறிந்து அவர்களை ஆளும் திறம் ஆட்சியாளர்க்கு இன்றியமையாதது, ஆட்சியாளர் என்பது நம் நாட்டைப் பொறுத்தவரை மத்தியில் பிரதமரையும், மாநிலங்களில் முதலமைச்சரையும் குறிக்கும்.

பிரதமர் (தலைமை அமைச்சர் - Prime Minister) ஒரு குறிப்பிட்ட அமைச்சரிடம் ஒரு குறிப்பிட்ட துறையைப் பார்த்துக்கொள்ளும்படி பணிப்பங்கீடு செய்து கொடுத்தால், அந்த அமைச்சர் அவருடைய துறையில் மேற்கொள்ளப்படும் செயல்கள் - திட்டங்கள் மக்களுக்குப் பயன்தருமா, தராதா என்பது போன்ற ஆவனவற்றையும் ஆகாதனவற்றையும் ஆராய்ந்து அறிந்து, அவற்றுள் ஆவனவற்றையே - பெரும் பயன் தருவனவற்றையே - விரும்பிச் செய்யும் திறம் படைத்தவராக இருத்தல் வேண்டும். அத்தகைய அமைச்சரிடம் புதிய பொறுப்புக்களை நம்பிக்கையுடன் ஒப்படைக்கலாம். அஃதாவது, நாட்டுக்கு நன்மை தரும் செயல்களை மேற்கொள்ளல் வேண்டும்.

நாட்டிற்கு வேண்டும் பொருள் வரும் துறைகளையும் வழிகளையும் பெருக்கி, அவற்றை மேலும் விரிவுபடுத்தி, அவ்வாறு செயல்படும்போது வரும் இடையூறுகளைக் களைந்து நாள்தோறும் கவனமாகச் செயல்படுபவரே உயர்ந்த அலுவலராவார். அரசுப் பணி ஏற்போர் எதிர்கொள்ளும் இடையூறுகள் சுற்றத்தார், பகைவர், சமூக விரோதிகள் முதலியோரால் வரும். தவற்றைக் கண்காணித்து அரசுக்கு வளம் தேடல் பணியாளர் பொறுப்பு.

மேலும், தேசப்பற்றும், தேசத்திற்கு வேண்டியவற்றை ஆராயும்திறமும், செயல்படும்போது மனம் கலங்காமையும், வருவாய் அதிகரித்துச் செல்வம் பெருகி வருங்கால், அதன் மீது ஆசை வைக்காத மனமாண்பும் ஆகிய நான்கு குணங்களையும் நிலையாக உடையவர் மீது தான் பொறுப்பை ஒப்படைக்கவேண்டும். இப்பண்புகளை ஓர் அதிகாரி

பெற்றுவிட்டால், அரசு அவர் மீது பெருத்த நம்பிக்கை வைக்கும். இதனை,

"அன்புஅறிவு தேற்றம் அவாஇன்மை இந்நான்கும்
நன்குஉடையான் கட்டே தெளிவு"

என்னும் குறட்பா தெள்ளிதின் விளக்கும். அன்பு என்பது நாட்டுப்பற்று. இது மிகமிக இன்றியமையாத அடிப்படைத் தகுதி. அறிவு என்பது தனக்கு இடப்பட்ட வேலை பற்றிய தெளிவான - விரிவான அறிவு. தேற்றம் என்பது தெளிவு. கலங்காமை அல்லது உறுதிப்பாடு. அவா இன்மை என்பது பொருளாசை.இன்மை அரசுப் பணத்தைக் கையாடல் செய்தல், வஞ்சித்தல் போன்ற தீய பண்பு. இது களையப்படவேண்டும். இத்தீச்செயலால் அரசின் மதிப்பு குறையும். மக்களுக்குச் சேரவேண்டிய நன்மைகள் முழுமையாகப் போய்ச் சேரா. எனவே, அமைச்சர், உயர் அதிகாரிகள், படைத்தலைவர்கள் போன்றோர் மேலேகாட்டிய நற்பண்புகள் அமையப் பெற்றவர்களாக இருத்தல் இன்றியமையாதது. இத்தகைய நன்மக்களிடமே பண்பட்ட அதிகாரிகளிடமே உயர்ந்த பொறுப்புக்களை அரசு ஒப்படைக்க வேண்டும்.

மேலே கூறப்பட்ட இலக்கணங்களை ஒருங்கே பெற்ற நல்ல அரசு தன் அலுவலர்களைத் தேர்ந்தெடுத்த பின்னும், அவர்கள் தொடர்ந்து தம் மதிப்பைப் காப்பாற்றுகிறார்களா என்பதையும் அரசு கண்காணிக்க வேண்டும். ஏனெனில், எத்தகைய நல்ல அதிகாரிகளும் - சிலர் - வழுக்கவும் கூடும். எவ்வளவு விழிப்பாக இருந்து தேர்ந்தெடுத்தாலும், அவர்கள் அலுவல் மேற்கொண்டு செயல்படும்போது வேறுபட்டவர்கள் ஆகிவிடுகிறார்கள். உலகில் இத்தன்மையை நாம் கண்கூடாக் காணலாம். நல்ல-நம்பிக்கையான-நேர்மையான அதிகாரிகள் கூட சில காலகட்டங்களில் சூழ்நிலை காரணமாகத் தவறு செய்ய முற்படுகிறார்கள். அத்தகையோரைக் கண்ணோட்டம் இன்றிக் கண்காணித்து, முடிந்தால் பணி நீக்கம் முதலிய தண்டனைகளையும் வழங்கிட வேண்டும். அப்போதுதான் அரசு எந்திரம் பழுதின்றி ஒழுங்காக இயங்கும். பதவி மோகத்தாலும், பண ஆசையாலும் சில அலுவலர் முற்றிலும் மாறிவிடுவதும் உண்டு. எனவே, அரசு விழிப்புடன் இருத்தல் வேண்டும் என்கிறார் திருவள்ளுவர்.

"எனைவகையால் தேறியக் கண்ணும் வினைவகையால்
வேறாகும் மாந்தர் பலர்"

என்னும் குறள் சிந்திக்கத்தக்கது.

அன்றியும் ஒரு பொறுப்பை அல்லது அரசுப்பணியை யாரிடம் ஒப்படைத்தல் வேண்டும் என்பதையும் சிந்திக்க வேண்டும். அன்பு காரணமாகவோ, நெருக்கம் காரணமாகவோ ஒருவரிடம் பணியைத்தரின், அப்பணி இடையூறு இன்றி நிறைவேறுவது அரிது. ஒரு பணியை மேற்கொண்டு செய்யும் காலத்தில் தனக்கு ஏற்படும் இடையூறுகளையும் துன்பங்களையும் பொருட்படுத்தாமல், தொடர்ந்து அதனை முடிக்கவல்ல ஒருவரையே தெளியவேண்டும். ஆற்றலும் செயல்பற்றிய துறைஅறிவும் உடையவரையே நம்ப வேண்டும்.

மேலும், ஆட்சித் தலைவர் தன் கீழ் அல்லது தன் ஆட்சியின் பல்வேறு துறைகளில் பணிபுரிவோரை எவ்வாறு நடத்த வேண்டும் என்பதையும், எவ்வாறு வேலை வாங்க வேண்டும் என்பதையும் திருவள்ளுவர் விரிவாகக் கூறியுள்ளார்.

1. முதலில் அலுவலரின் (அ) பணி செய்வோரின் இயல்புகளை ஆராய்தல் வேண்டும்.
2. பணியின் அல்லது அலுவலின் தன்மை யாது? என்பதனைத் துணிந்து கொள்ள வேண்டும்
3. பணியையும், பணியாளையும் ஆராய்ந்தபின், அவரிடம் அதனை ஒப்படைத்தல் வேண்டும்
4. மேலே கண்டவாறு தேர்ந்து கொண்டபின், பணியாளரின் வேலையில் அடிக்கடி தலையிடுதல் கூடாது.
5. பணியாளரிடம் அவநம்பிக்கை கொள்ளுமாறு பிறர் கூறுவனவற்றை அவ்வாறே எடுத்துக் கொள்ளல்கூடாது. இதனால், வெறுப்பு ஏற்பட்டு பணி செவ்வனே செய்யமுடியாது போகும்.

அறிவும் ஆற்றலும் உடைய ஒருவரைத் தேர்ந்து கொண்ட பின்னும், அவர் செய்ய வேண்டிய பணியை ஆராய்ந்தபின்னும், அவரையும் அவரது பணியையும் உரிய காலத்தோடு பொருந்தச் செயல்படுத்த வேண்டும். அஃதாவது, இன்ன காலத்தில், இன்ன

ஆற்றல் உடையவர் செய்தால், அவ்வினை (செயல்) இனிது முடியும் என்பதையும் ஆலோசிக்க வேண்டும்.

இந்த வேலையை முடிப்பதற்கு இவரை மிகச்சிறந்தவர் என்று முடிவு செய்தபின், காலம் தாழ்த்தாது அவ்வேலையை அவரிடம் ஒப்படைக்க வேண்டும். செய்யப்பட வேண்டிய வேலை, அதற்குரிய கருவிகள் அல்லது உபாயங்கள், அதனைச் செய்ய நியமிக்கப்பட்ட பணியாளர் ஆகிய மூன்று கூறுகளும் ஒத்திருக்குமானால், வேறு சிந்தனை இன்றி உடனே அவரிடம் அவ்வேலையை விட்டுவிடலாம்.

ஓர் அலுவலகத்தில் உண்மையாகவும் நேர்மையாகவும், கடமையுணர்வுடனும் பணியாற்றிவரும் ஒருவர் மீது அவ்வலுவலகத்தில் உள்ள பிற அலுவலரோ, வெளியாரோ, வேண்டுமென்றே சில நேரங்களில் புகார் (குறை) கூறலாம். அப்போது உயர் அதிகாரி மிகவும் நிதானமாகச் சிந்தித்து உண்மை கண்டறியவேண்டும். செவிவழிச் செய்தியையே நம்பி அந்த அலுவலரைச் சந்தேகக் கண்ணோடு நோக்கினால், அலுவலகம் சிறக்காது. அலுவலும் உரிய முறையில் நடைபெறாது. உண்மையான ஊழியரும், மனம் நொந்து தன் கடமையைப் பொறுப்புடன் செய்ய இயலாது. அரசுக்கு இழப்பே ஏற்படும்.

அரசு அலுவலர்கள் எண்ணத்தாலும் சொல்லாலும் செயலாலும் மாறுபடாமல் ஒரே நிலையில் அமர்ந்து அரசு காரியங்களைச் செய்து வருவதை மேலதிகாரிகள் நாள்தோறும் கண்காணித்து வருதல் வேண்டும். அவ்வாறு கண்காணிப்பது அலுவலருக்குத் தெரியக்கூடாது. இனி இந்த அதிகாரத்தில் மனங்கொள்ளத்தக்க குறள்கள் வருமாறு

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்"

"நாள்தோறும் நாடுக மன்னன் வினைசெய்வான்
கோடாமை கோடாது உலகு"

(நாடுதல்-கண்காணித்தல், கோடாமை-வழுவாமை, உலகு-மக்கள்)

(தொடரும்)

# இலக்கியப்புதையல்

*பேரறிஞர் செ.கந்தசாமி*

என்றுமுள தென்றமிழ் அன்னை சீரிளமை குன்றாச் சிறப்புடையவள். எண்ணற்ற இலக்கியங்கள், தனிப்பாடல்கள், புலவர் பெருமக்களின் வரலாற்றுப் பெட்டகங்கள், எண்ணக் கருவூலங்கள், உவமை தரும் உவமைகள், களிப்பூட்டும் கற்பனைகள், கேட்பார் பிணிக்கும் சொல்லாட்சிகள், அலகு தரும் அலங்காரங்கள் நிறைந்த தமிழ்ப்புதையல்கள், புலவர்கள் வியந்து பாடியனவும் விரைந்து பாடியனவும் ஆகிய பாடல்கள் பல. இவற்றுள் பல இன்னும் நம்மால் அறியப்படாதவைகள் அவற்றை அறிவதாக இஃது அமைகிறது.

சேது நாட்டு மன்னராக விளங்கியவர் துரைராசா முத்தராமங்க சேதுபதி. இவர் 400 தனிப்பாடல்களும் 9 நூல்களும் பாடியுள்ளார். அவர்தம் அவைக்களப்புலவர் சதாவதானம் சரவணப் பெருமாள் கவிராயர். இவ்விருவரும் அவ்வப்போது பாடிய வினாவிடைப் பாடல்கள் பல கற்பனை நயமுடையவை. முதலிரண்டு அடிகளில் ஒருவர் வினாவை எழுப்பப் பின்னிரண்டு அடிகளில் மற்றொருவர் விடை தருவார். அத்தகைய பாடல்களுள் கற்பனை நயமிக்க ஒருபாடல்.

ஆற்றில் பெண்கள் குளித்துக்கொண்டிருக்கின்றனர். அவர்களுள் ஒருத்தி இரண்டு கைகளிலும் நீரை அள்ளிக்கொண்டு 'மச்சம்! மச்சம்' எனக்கூறிக்கொண்டே கரையேறுகிறாள், இதைக் கண்ணுற்ற கவிராயருக்கு ஏன் இப்பெண் இப்படிக் கூறுகிறாள்? என்ற ஐயம் ஏற்படுகிறது, இதனை அருகிலிருக்கும் அரசரிடம் வினவுகிறார். அதற்கு அரசர், 'நீராடிய பெண்களுள் ஒருத்தி கையில் கொண்டு வந்த நீரை உற்றுப்பார்க்கிறாள். அங்கே இரண்டு மீன்கள் தெரிகின்றன. இதனைக்கண்டு வியந்து 'மீன், மீன்' என்று கூவுகிறாள். நீரைத் தரையில் சிந்தி மீனைப்பிடிக்க முயல்கிறாள். அங்கே மீனைக்காணாது திகைக்கிறாள். காரணம் அவளது

கண்களே மீன்களாகத் தெரிகின்றன என்று விடை தருகிறார். கற்பனை நயமிக்க இப்பாடலின் பொருள் இப்பொழுது புரிகிறதல்லவா? அப்பாடல்:

"வாரியகை நீரையொரு மாதுகண்டு திண்கரையில்
சோரவிட்டுத் தேடியதென் தேர்வேந்தே - ஊரியுலாம்
மச்ச மிரண்டுகையில் வந்துசிக்கிற் றென்றுளத்தின்
மெச்சிக் களித்து விரைந்து"

வேறொரு புலவர் பாடிய பாடலில்,

கள்ளுண்டு களித்த வண்டொன்று தரையில் மயங்கிக் கிடக்கிறது. அதனை ஒரு நங்கை கண்டு நாவல்கனி என மகிழ்ந்து எடுக்கிறாள். மயக்கம் தெளிந்த வண்டு கண்விளித்துப் பார்க்கிறது. தான் தாமரைப்பூவில் இருப்பதாக எண்ணுகிறது. சற்று மேலே பார்க்கிறது. ஆங்கு ஒரு முழு நிலவு தெரிகிறது. நிலவைக்கண்டு துணுக்குற்ற வண்டு மாலைக்காலம் வந்து விட்டதே என்று அஞ்சிப் 'பொள்ளெ'னப் பறந்து விடுகிறது. இது பாடற்கருத்து.

அப்பாடலில், பெண்ணின் கையைத் தாமரை என எண்ணிய வண்டு அவளது முகத்தை ஒரு முழு நிலவாக எண்ணுகிறது. அப்பொழுதுதான் அதற்கு 'ஞானோதயம்' வருகிறது. ஆகா! நிலவு வந்துவிட்டது. எனவே இது மாலைக் காலம், மாலைக் காலம் வந்தால் தாமரை வாடிவிடுமன்றோ? அவ்வாறானால் நாம் அதில் அகப்பட்டுக்கொள்ள நேருமே என்று அஞ்சி வண்டு விரைவாகப் பறந்து விடுகிறது. இங்கும் பெண்ணின் கை தாமரையாகவும் முகம் முழு மதியாகவும் உருவகப்படுத்தப் பட்டுக் கற்பனை நயத்துடன் மிளிர்வதைக் காணலாம்.

"நாவலங்கனி யென்றெண்ணி நங்கைதன் கையில் கொண்டாள்
மேவிய வண்டு கையைக் கமலமென் றுன்னி
மங்கை ஆவலோ டதனை நோக்க அவள்முகம் மதியென்றஞ்சி
பூ இனிக் குவியும் என்றே 'பொள்' எனப் பறந்த தம்மா"

என்பது அப்பாடல்.

புலவர்களின் புலமைத் திறனை வெளிப்படுத்துவன அவர்தம் சிலேடைப்பாடல்கள் இவ்வகைப்பாடல்கள் இருபொருள் முதல் அறுபொருள்வரை உண்டு என்பர். இச்சிலேடைப் பாடல்கள் புலவர்களின் புலமைத்திறன், பொருளறிந்து பாடும் திறன், புலவர்களின் சொற்சிலம்பங்கள், நகைச்சுவை உணர்வுகள், தத்துவங்கள் ஆகியவற்றின் உள்ளீடுகளாக அமைந்திருத்தலைக் காணலாம். புலவர்களும் இவ்வகைப் பாடல்களைப் பாடுவதில் பெருவிருப்பம் கொண்டிருந்தனர்.

சிலேடைப் பாடல்கள் பாடுவதில் வல்லவர் வேம்பத்தூர் பிச்சுவையர் இவரைச் 'சிலேடைபுலி' என்றே கூறுவர். கல்போது பிச்சுவையர் என்ற புலவர் வேம்பத்தூர் பிச்சுவையரின் சிலேடையப் புலமை பற்றி,

" உச்சிதமா முன்னோரு ரைத்ததமிழை யெல்லா
மச்சரங் களச்சரங் களாகவே - நிச்சயமாப்
பிச்சுரைப்ப தாலேநின் பேர்பிச் சுவையனென
வைச்சனன் கல்போது மன்" என்று பாடுகிறார்.

அஃதாவது பாடல்களை அச்சரம் அச்சரமாய் பிச்சு வைப்பதால் பிச்சுவையர் எனப் பெயர் வந்ததாம். அச்சரம் என்பது எழுத்து.

சொற்களைப் பிரித்துப் பொருள் கொள்வது பிரிமொழிச் சிலேடை; பிரிக்காமல் பொருள்கொள்வது செம்மொழிச் சிலேடை சில பாடல்களில் வந்த சொல்லே மீண்டம் மீண்டும் வந்து வேறு வேறு பொருள்களைத் தருவதும் உண்டு. இத்தகைய பாடல்கள் கேட்பார்ப் பிணித்துச் செவிக்கு இன்பம் தருவன.

புலவர்கள் தங்களுக்குள் இயல்பாகப் பேசிக்கொள்ளும் போதுகூட அவர்களிடம் நீரோட்டமாக சிலேடைகள் பிறப்பதுண்டு. சங்கரன்பிள்ளை என்றொரு புலவர் மனைவியை இழந்தவர். ஒரு நாள் உணவிற்காகச் சட்டியில் மாவினை வறுத்துக் கொண்டிருக்கிறார். அப்பொழுது வேறொரு புலவர் அங்கு வருகிறார். வந்தவர் சங்கரன் பிள்ளையைப் பார்த்து

என்ன சங்கரன் பிள்ளை சட்டியில் மாவறுக்கிறீர் என்கிறார். அதற்குச் சங்கரன்பிள்ளை உடனே

'சங்கரன்பிள்ளை சட்டியில் மாவறுத்தல் சகஜம்தானே' என்கிறார்.

சங்கரன் (சிவபெருமான்) பிள்ளையாகிய முருகன் சட்டியில் (சஷ்ட்டியில்) மாவறுத்தல் (சூரபன்மாவை அறுத்தல்) இயல்புதானே என்பது இதன் பொருள்.

துரைராசா முத்து ராமலிங்க சேதுபதி பாடிய ஒரு பாடலில் அதிரசம், மோதகம் (கொளுக்கட்டை) கடலைப்பொரி, பொறிமா ஆகிய திண்பண்டங்கள் சிலேடையாகப் பேசப்பட்டுள்ளன.

கடலைப் பொரிய செய்தவனும், கைபொறிமாப் பின்னோனும் ஆகிய முருகன் அதிரசத்தை (அதிக அழகுள்ள வள்ளியை) மோதகத்தால் (காதல் மோதும் உள்ளத்தால்) மணம் புரிந்து கொண்டான் என்பது பாடல் கருத்து இதில் அதிரசம், மோதகம், கடலைப்பொரி, பொறிமா ஆகிய தின்பண்டங்கள் சிலேடையாக வந்து செய்யுளுக்கு அழகு தருவதைக்காணலாம். இப்பாடல்:

"அதிரசத்தை மோதகத்தா லண்டர்குடி யாண்டான்
பொதியவிழ்கஞ் சத்தான் புரிந்தாள் - எதிரும்
கடலைப் பொரியவிட்டான் கைப்பொறிமாப் பின்னோன்
கடலையொத்த வென்வினையைக் கடந்து"

இவர் பாடிய பிறிதொரு பாடல் :

தேன் சிந்தும் கூந்தலையுடைய வள்ளியை (தேங்குழலாள்) தேர்ந்திருப்பவனும் வேற்படையை உடையவனும் மயிலையும் பாம்பையும் கொண்டவனும் ஆகிய முருகன் என் மனத்துள் என்றும் வீற்றிருக்க வேண்டும் என்பது இதன் பொருள். தேங்குழல், தேங்காய், தோசை, பணியாரம் ஆகிய தின்பண்டங்கள் இப்பாடலில் வந்து செவிக்கும் நாவிற்கும் இனிமை தருகிக்றன. அப்பாடல் :

"தேங்குழலாள் வள்ளி தினம்புணரும் சண்முகவேள்
ஆங்குழலா யுன்மனந்தேங் காயென்றான் - நீங்காப்

பருந்தோசை வேலான் பணியாரம் பேணி"

இத்தகைய சிலேடைப் பாடல்கள் உண்மையிலேயே செவிக்கு இன்பம் தருவது என்றால் அது மிகையாகாது.

செய்யுளுக்கு எழுத்தானும் சொல்லானும் பொருளானும் அழகு தருவது அணி செஞ்சொற் கவியின்பம் திளைக்கப் பாடிய அணிநலமிக்க பாடல்கள் பல தமிழில் உள. அப்பாடல்கள் புலவர்களின் மதிநுட்பத்தினையும் கவிப்புலமையையும் பறை சாற்றுவன. வந்த சொல்லே மீண்டும் மீண்டும் வரப்பாடுவது, பாடல் முழுமைக்குமுரிய கருத்து அல்லது பதிலை அச்செய்யுளின் ஏதாவது ஓரிடத்தில் வரப்பாடுவது எனப் பலவகைகளில் செய்யுளுக்கு அழகு செய்வர் புலவர்கள். இத்தகைய தமிழ்ப் புதையல்களுள் சுந்தரக் கவிராயர் பாடிய பாடல் ஒன்றினைச் சான்றாகக் கொள்ளலாம் அப்பாடல்:

"மரமது மரத்திலேறி மரமதைத் தோளில் வைத்து
மரமது மரத்தைக்கண்டு மரத்தினான் மரத்தைக்குத்தி
மரமது வழியேசென்று வளமனைக் கேகும்போது
மரமது கண்டமாதர் மரமுடன் மரமெடுத்தார்"

அஃதாவது, அரசன் மரத்தாலாகிய தேரில் ஏறி மரத்தாலாகிய வில்லைத் தாங்கி வேட்டைக்குச் செல்கிறான். அங்கு வேங்கைப் புலியைக் காண்கிறான். உடனே மரத்தாலாகிய அம்பால் அவ்வேங்கையைக் குத்திக் கொல்கிறான். இறந்த வேங்கையை மரத்தாலாகிய வண்டியில் ஏற்றிக்கொண்டு வெற்றியுடன் அரண்மனைக்கு வருகிறான். அரசன் வரவுகண்ட பெண்கள் ஆல் அத்தி (ஆரத்தி) எடுத்து வரவேற்கிறனர்.

இப்பாடலில் 11 இடங்களில் 'மரம்' என்ற சொல் மீண்டும் மீண்டும் வந்தாலும் ஒவ்வொரிடத்திலும் ஒவ்வோர் பொருளைத் தருகிறது.

அஃதாவது மரமது (அரசமரம்) அரசன், என்றும் மரத்தில் ஏறி (மரத்தாலாகிய தேரில் ஏறி என்றும் மரமதைத் தோளில்

ஏந்தி (மரத்தாலாகிய) வில்லைத் தோளில் ஏந்தி என்றும், மரமதைக்கண்டு (வேங்கைமரம்) வேங்கைப்புலியைக்கண்டு என்றும், மரத்தினால் மரத்தைக்குத்தி (மரத்தாலாகிய அம்பால் புலியைக் குத்தி) வண்டியில் ஏற்றிக்கொண்டு வரும்போது, என்றும் மரமுடன் மரமெடுத்தார் (ஆலமரம், அரசமரம்) ஆல் அத்தி (ஆரத்தி) எடுத்தாள் என்றும் பொருள் கொண்டால் இப்பாடலின் சுவையை நன்கு உணரலாம்.

இராமச்சந்திர கவிராயர் என்றொரு புலவர் திருவேங்கட நாதன் என்னும் வள்ளலைக் காணச் சென்றார் புலவரின் வறுமைக் கோலத்தைக் கண்ணுற்ற வள்ளல், "இரவலனே" உனக்கு இல்லாதது எது? என்கிறான். புலவர் திரு என்கிறார். உன் இதயம் எப்படி? என்கிறான் அரசன் அதற்குப் புலவர் வறுமையால் வேம் (வேகும்) என்கிறார். அவ்வாறெனில் உனக்கு உணவு ஏது? என்கிறான் அரசன். அதற்குப் புலவர் கடனாகப் (கடம்) பொருள் பெற்றுத்தான் என்கிறார். அரசன் புலவரை நோக்கி, சுவையற்ற தென்னை? என்கிறார். புலவர் (நாக்கு) நா என்கிறார். நீர் விரும்புவது என்ன? என்கிறான் அரசன் அதற்குப் புலவர் பொருள்(தா) என்கிறார். இப்பொழுது அரசன் கேட்ட வினாக்களுக்குப் புலவர் அளித்த பதிலின் சொற்களைக் கூட்டிப் பார்த்தால் வள்ளலின் பேராகிய 'திருவேங்கடநாதர்' என்பது வரும் இப்பொருள் பொதிந்த பாடல் வருமாறு:

"இரவல னேயுனக் கில்லாத தென்ன இதயமென்ன
பரவுண வேது சுவையற்ற தென்னசொற் பாண்மையென்ன
தரவுரை செய்திட வென்றா னதற்கொன்றுஞ் சாற்றிலன்யான்
வரதிரு வேங்கட நாதாவென் றேன்பொன் வழங்கினானே"

புலவரே வினா அமைத்து அதற்கு விடையும் தந்து பாடியிருக்கும் இப்பாடல் பொருட்சுவை உடையதன்றோ?

# தமிழ் மொழி கற்பித்தலில் எழுத்துத் திறன்

பேரறிஞர் இரா. வேல்முருகன்

**செந்தமிழின் சிறப்பு**

முன்னைப் பழமைக்குப் பழமையாய் பின்னைப் புதுமைக்குப் புதுமையாய் என்றென்றும் சீரிளமைத் திறத்தோடு விளங்கும் நம் தமிழ் மொழி தொன்மைச் சிறப்பும் இலக்கிய இலக்கண வளமும் கொண்டு

"வான மளந்த தனைத்து முணர்ந்திடும்
வண் மொழி"

*என்ற பாரதியின்* வரிகளுக்கேற்ப உலகெல்லாம் சிறப்புற்றுத் திகழ்ந்து கொண்டிருக்கிறது அத்தகைய சிறப்பு வாய்ந்த மொழியின் பயன்பாட்டையும் வகுப்பறையில் கற்பிக்கும் போது பின்பற்ற வேண்டிய நடவடிக்கைகளையும் குறிப்பாக எழுத்துத் திறனை மேம்படுத்தக் கற்பிக்கும் முறைகளையும் விளக்குகிறது இக்கட்டுரை.

**தாய்மொழி**

மொழி என்பது மனிதனை மனிதனாக வாழவைக்கும் கருத்துப்பரிமாற்றக் கலையாகவும் உணர்வுகளின் வெளிப் பாடகவும் விளங்குகிறது பாலோடு தாயூட்டிய மொழியே தாய்மொழி என்பது பரவலாகப் பேசப்பட்ட போதிலும் அறிவியல் அடிப்படையில் தாய்மொழி என்றால் என்ன என்பது பற்றி ஐக்கிய நாட்டு அறிக்கையின் கூற்றினை இங்கே நினைவு கூர்வது பொருத்தமாக அமையும். இளம் வயதில் கற்றுக்கொண்ட மொழியாகவும் சிந்தித்து கருத்துக்களைப் பரிமாறவும் இயல்பாக ஒருவனுக்கு உதவுவதுமாகவும் அமையும் ஒன்றுதான் தாய்மொழி தன்னைப்பற்றியும் பிறவற்றைப் பற்றியும் கருத்துக்களை முதன்முதலில் வெளியிடப் பயன்படுத்தும் இம்மொழி தாய் தந்தையரின்மொழியாக இருக்க வேண்டும் என்பதில்லை ஏனெனில் குறிப்பிட்ட காரணங்களால் ஒருவன் முதன் முதல்

பேசப் பழகிய மொழியை முழுவதுமாக. மறந்து விடவும் கூடும் என்பது ஐக்கிய நாட்டு அறிக்கை கூறும் விளக்கம்.

தாய் மொழியை வரையறுப்பதில் இது போன்ற சிக்கல்கள் உண்டாவதாலேயே பிற்காலத்தில் முதன் மொழி இரண்டாம் மொழி என்ற கோட்பாடு உருவாயிற்று சிங்கப்பூர் நாட்டைப் பொறுத்தவரை தமிழ் மொழி ஆட்சி மொழியாக அமைவதோடு இரண்டாம் மொழியாகக் கற்பிக்கப்படுகிறது இத்தகையசூழலில் மொழித்திறன்கள் மொழி கற்றல் கற்பித்தலில் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

**மொழித்திறன்கள்**

மொழித்திறன்கள் நான்கு வகைப்படும் அவையாவன

1. கேட்டல் 3. பேசுதல்
2. வாசித்தல் 4. எழுதுதல்

கேட்டல் வாசித்தல் ஆகியவை நுகர்தல் திறன்கள் பேசுதல் எழுதுதல் ஆகியவை படைக்கும் திறன்கள் நுகர்தல் திறனை உட்கொள்ளல் திறன் என்றும் படைக்கும் திறனை அளித்தல் திறன் அல்லது வெளியிடல் திறன் என்றும் விளக்கலாம்.

**எழுத்துத் திறனும் அதன் பயன்களும்**

மொழிகற்றல் கற்பித்தலில் எழுத்துத் திறன் மிக இன்றியமையாததாக அமைகிறது எழுத்துத் திறன் என்பது உருவாக்கும் திறன் அல்லது ஆக்கத் திறன் எனப்பொருள்படும் எண்ணங்களையும் அனுபவங்களையும் எளிய நடையில் தெளிவாகவும் பிழையின்றியும் எழுதுவதற்கும் ஏற்ற திறமைகளைப்பெறுவதற்கும் உதவுவதே எழுத்துத்திறனாகும்

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு"

என்ற வள்ளுவரின் வரிகள் எழுத்துத்திறனின் முக்கியத்து வத்தை வலியுறுத்துகின்றன பேசுகின்ற பேச்சுகளை நிலை பெறவைப்பதும் நாடு சமயம் காலம் இனம் மொழி ஆகியவற்றை கடந்த நிலையில் அறிவுப்பாலமாய் விளங்குவதும் எழுத்துக்

கலையே தத்துவ அறிஞர் பிளேட்டோ இதனைத் தேவகலை (divine art) என வர்ணிக்கின்றார் எழுத்து மொழி மனிதனை நாகரிக நிலைக்கு உயர்த்தத் தொடங்கியது காலத்தாலும் இடத்தாலும் நெடுந்தொலைவில் உள்ள அறிஞர் பலரின் கருத்துக்களை நூல் வடிவில் பெறுவதற்குக் காரணமாக அமைகிறது முன்னோர் தம் படைப்புகளை முழுமையாக அறிந்து கொள்ள முடிகிறது தேர்வுகளில் எழுத்துத்திறன் அதிகப் பங்காற்றுகிறது உரிய சொல்லாட்சியைப்பயன்படுத்தி சொற்றொடர்களை நிதானமாக அமைக்க முடிகிறது உள்ளத்து உணர்வுகளை வெளிப்படுத்த எழுத்துத் திறன் மிகவும் பயன்படுகிறது.

எழுத்துத்திறனை மேம் படுத்தப் பின்பற்றப்பட வேண்டிய செயல் முறைகள்

1. சொற்களஞ்சியப் பெருக்கம்
2. சொல்லேணி அமைத்தல்
3. கதை உருவாக்குதல்
4. கட்டுரை எழுதல்
5. உரையாடல் வர்ணனை முதலியவற்றை விவரித்து எழுதுதல்
6. படம் பார்த்து விளக்குதல்
7. சுருக்கி வரைதல்

**சொற்களஞ்கியப் பெருக்கம்**

சொற்களஞ்சியப் பெருக்கம் எழுத்துத்திறனின் மேம்பாட்டிற்கு மிகவும் உறுதுணையாக அமைகிறது இரண்டாம் மொழியாகத் தமிழைக் கற்பதன் விளைவாக மாணவர்கள் சொல்வளக்குறைவால் அல்லல்படுவதைக் காண முடிகிறது அன்றாடப் பயன்பாட்டில் உள்ள பெயர் வினைச் சொற்களை ஒரு சொல் பல பொருள் நிலையிலும்பல சொல் ஒரு பொருள் நிலையிலும் எழுதும்படி பயிற்சி அளிக்கலாம் சொல்லுக்குள் இருக்கும் சொற்களை அறிந்து எழுதச் சொல்லாம் 'நகர

| இதழ் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
| --- | --- | --- |
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 60 | ரூ. 600 |
| வாணாள் கட்டணம் | ரூ. 500 | ரூ. 2000 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ் கட்டணம் | ரூ. 6 | |

அன்பு அச்சகம், மதுரை-1. ✆ 341116